EDCS
Education Co-operative Society

# பதவி வெற்றிடம்

வரையறுக்கப்பட்ட கல்விச் சேவைகள் ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம் நாட்டின் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் அங்கத்தவர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கும் சிக்கன மற்றும் கடன் வழங்கல் தொடர்பில் செயற்படும் கூட்டுறவுச் சங்கமாகும்.

சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் இருக்கின்ற மேற்குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு சங்கத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் வெளி விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட பொது நிபந்தனைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2026.03.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

(யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டம் தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களின் பிரதான நகரங்களில் சங்கத்தின் மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.)

இதற்காக திறமையான, ஊக்கமுடைய மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற முடியுமான தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உதவிக் கணக்காளர் (நிறைவேற்றுச் சேவை பிரிவு E.3.2 – III தரம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தக/ நிதி முகாமைத்துவம்.'. கணக்கியல் துறையில் பட்டத்துடன் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தரத்தில் 02 ஆண்டுகள் அனுபவம்.

**அல்லது**

2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்கியல் துறையில் 04 ஆண்டு டிப்ளோமா கற்கையுடன் கணக்கியல்/ வர்த்தகத் துறையில் நிறைவேற்றுத் தரத்தில் 02 ஆண்டுகள் அனுபவம்

**அல்லது**

3. பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்று தரத்திலான பதவி ஒன்றில் 02 ஆண்டுகள் அனுபவம்.

**அல்லது**

4. கணக்கியல் தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் (AAT) மூன்றாம் கட்டத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தரத்தின் பதவி ஒன்றில் 05 ஆண்டுகள் அனுபவம்

**அல்லது**

5. மேலுள்ள 1,2,3 இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில் தகைமைகளில் ஒன்றுடன் இணைக்கப்படும் கூட்டுறவு சங்கத்தின்/ சங்கத்தின் பணிக் குழுத் தரத்தின் பதவி ஒன்றில் 07 ஆண்டுகள் அனுபவம் மற்றும் சம்பள உயர்வை பெற்றிருத்தல்.

**சம்பள அளவு: மாதாந்தம் 48,400 – 720 X 10**

**பொதுவான நிபந்தனைகள்**

- மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு தொடர்புடைய மாதாந்தச் சம்பளம் தவிர 17,800 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவும், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட 11,000 ரூபா கொடுப்பனவும் உரித்தாகும்.
- விண்ணப்பதாரர்கள் சுயவிபரக்கோவை மற்றும் அனைத்து கல்வி மற்றும் தொழில் தகைமை அடங்கியதாக தாமாக தயாரித்த தரவு ஆவணம் ஒன்றுடன் வழங்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவ மாதிரியை பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்களின் சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பதாரர்கள் தமது கல்வி மற்றும் தொழில் தகைமையை குறிப்பிடும் சான்றிதழ்களின் நிழல்பிரதிகளையும், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்தை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்)
- வேறு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஒருவர் விண்ணப்பிக்கும்போது குறித்த சங்கத்தின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, வேறு கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் பணியாற்றுவதற்கு இடையே நேரடியாக விண்ணப்பித்திருப்பதாக அவர் தேர்வு செய்யப்பட்ட பின்னர் கூட தெரிய வந்தால் பதவியை இழப்பதற்கு அது காரணமாகக் கூடும்.
- சங்கத்தின் எந்த ஒரு மாவட்டம்/ கிளை அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு விரும்ப வேண்டும் என்பதோடு, தேர்வு செய்யப்பட்ட பின் வெற்றிடம் இருக்கும் அலுவகத்திற்கு பணிப்பாளர் சபை முடிவுக்கு அமைய இணைக்கப்படும் என்பதால் அதற்காக இணங்குதல் வேண்டும்.
- நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியுடையவர்கள் தேர்வு செய்யப்படுவதோடு, கல்விச் சபையின் முடிவு இறுதி முடிவாகும்.


**பிரதான தலைவர்**
**வரையறுக்கப்பட்ட கல்விச் சேவைகள் ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்,**
**இலக்கம் 294, காலி வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி இலக்கம்: 011-2266000**